ADROIT

ADROIT PUBLIC RELATIONS PVT. LTD.
No. 5, Damodara Mudali Street,
Chetput, Chennai - 600 031, India
Phone : 044-28362166, 28362343

| Publication | Hindu Tamil |
|---|---|
| Date | 06.03.2019 |
| Edition | Tamil Nadu |
| Page No | 04 |

மார்ச் 14 முதல் 16-ம் தேதி வரை

# சென்னையில் சர்வதேச பொறியியல் கண்காட்சி

**சென்னை**

சர்வதேச பொறியியல் கண்காட்சியின் 8-வது பதிப்பு சென்னையில் வரும் 14-ம் தேதி முதல் 16-ம் தேதி வரை நடத்தப்பட உள்ளதாக இந்திய பொறியியல் ஏற்றுமதி மேலாண்மை கவுன்சிலின் தென் மண்டல இயக்குநர் சி.எச்.நாடிகர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் மேலும் கூறியதாவது:

இந்த கண்காட்சியில், 400 ஸ்டால்கள் அமைக்கப்பட உள்ளன. இதில், தமிழகத்தின் சிறு குறு தொழில் முனைவோர்கள் 130 ஸ்டால்களை அமைக்கின்றனர். 60 நாடுகளைச் சேர்ந்த 400 பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இதில் பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்கங்கள் நடத்தப்படும். இந்த கண்காட்சிக்கு 12 ஆயிரம் பார்வையாளர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கண்காட்சியில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த கண்காட்சியின் மூலம் எதிர்காலத்தில் ரூ.500 கோடி முதல் ரூ.600 கோடி மதிப்பிலான வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையின் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ் கூறும்போது "ஜவுளித்துறை உட்பட தமிழகம் அனைத்து துறைகளிலும் நாட்டின் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. தமிழகத்தில் தொழில் தொடங்க ஆர்வமுடன் பலர் முன் வருகின்றனர். அதுதான், தமிழகத்தின் பலமாக உள்ளது" என்றார்.